தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 24, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023, 1992 ஏப்ரல் 6, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்."

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவர் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்றும் இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் அமைச்சர் திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவையின் முன் மொழிகிறேன்:

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சருமான திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள் 3—4—1992 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப் பேரவை மிகவும் வருந்துகிறது. திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சி அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் பொதுத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் பொதுத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணி யாற்றியுள்ளார். மேலும், அவர் 1954 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்று, சிறப்புறப் பணியாற்றியவர் ஆவார். 1966 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1980 ஆம் ஆண்டு முதல் 198 ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும் நல்லமுறையி

பணியாற்றியுள்ளார். சமுதாயத்தில் நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்திற்காகவும், மேன்மைக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து சேவை புரிந்த பெருமகனாகவும் திகழ்ந்து வந்துள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்த குடும்பத்திற்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)

2. மானியக் கோரிக்கைகள், 1992–93.—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 54 —தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும். தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளுக்காக, 3–4–1992 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானங்கள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்திற்குப் பதிலுரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டை எதிர்கொண்டிருக்கிற பொருளாதாரச் சிக்கல்களும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளும் நாம் இதுவரை பின்பற்றி வந்த தொழில் கொள்கைகளுக்குத் தற்போது தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்கிற படிப்பினையை நமக்கு வழங்கியுள்ளது. ஆகவே, தேசிய அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழில் முன்னேற்றக் கொள்கையைச் சார்ந்தும், தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தை முன்னுரிமையோடும், வேகத்தோடும், தூண்டுகிற வகையிலும் சில சிறப்பு நடவடிக்கைகளை எங்கள் அரசு எடுத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.